O.S.No. 94/2024

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:30.06.2026

P.W.1:பூபதிராஜ் த/பெ– சண்முகபெருமாள்

**<u>சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) வங்கிகளுக்கு கடனை வசூல் செய்வதற்கு SARFASI Act உள்ளது என்றால் சரிதான். SARFASI Act சம்மந்தப்பட்ட வழக்குகளை நடத்துவதற்கு தனியாக நீதிமன்றம் உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கு இந்நீதிமன்றத்தில் நடத்த அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு எங்கள் நிர்வாகம் தனியாக அதிகார ஆவணம் எதுவும் வழங்கவில்லை என்றால் நான் கிளை மேலாளர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன். எனது வங்கி நிர்வாகம் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் அளிக்கவில்லை என்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா கடன் 2013-2014 ம் வருடத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பு ஆவணத்தில் வருடம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.8 கடன் உயிர்ப்பு ஆவணத்தில் முதலில் உள்ள தேதிக்கும், கடைசியில் உள்ள தேதிக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 கடன் உயிர்ப்பு ஆவணத்தில் கடன் புதுப்பிப்பு தேதியாக 24.02.2021 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்கள் எங்களால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதால் தான் மேற்படி தேதியில் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. கடன் வாங்கிய தேதி முதல் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தவில்லை என்றால் சரிதான்.

3) கடன் வாங்கிய காலம் முதல் வங்கிக்கும், பிரதிவாதிக்கும் கடன் வசூல் செய்வதில் முரண்பாடு மற்றும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எங்களுக்கும், பிரதிவாதிக்கும் கடன் கொடுத்த காலம் முதல் பிரச்சனை இருந்து வந்தால் 2021 மற்றும் 2022ம் ஆண்டுகளில் பிரதிவாதி வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கடன் 2015ம் வருடம் இறுதியாக கொடுக்கப்பட்டு உள்ளதால் தாவா வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராதில், பிரதிவாதி எந்த தேதியில், எவ்வளவு தொகை வட்டி செலுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது முழுமையாக மற்றும் சரியான முறையில் வடிவமைக்கப்படாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிகள் பொய்யாக ஜோடிக்கப்பட்டதால் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.